அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 304/2019

இந்த நீதிமன்றத்து உதவியாளர்செல்வி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 07.10.2025 |
| பெயர் சுந்தரி | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

1.எனது கணவர் T நகரில் மெக்கானிக்காக போக்குவரத்து துறையில் வேலை செய்கிறார். மாதம் சுமார் ரூபாய் 40 ஆயிரம் சம்பளம் பெறுவாரா என்றால் ரூபாய் 18 ஆயிரம் பெறுவார். நான் அரசு ஆசிரியராக உள்ளேன் என்றாலும் எனக்கு இன்னும் 2வருடங்களில் ஓய்வுகாலம் வரும் என்றாலும் சரிதான். நான் 28 வருடம் ஆசிரியராக பணியாற்றி வருகின்றேன். நான் பம்மது குளம் , காந்தி நகர், Red hill பகுதியில் உள்ள அரசு பகுதியில் வேலை செய்கிறேன். நான் விடுமுறை நாட்களில் வழக்கு சொத்திற்கு சென்று சுத்தம் செய்துவிட்டு வருவேனா என்றால் நான் வழக்கு சொத்தில் தான் வசித்து வருகிறேன்.

2. இரண்டாம் பிரதிவாதி எடுத்ததாக சொல்லியுள்ள வங்கிகடனை யார்

செலுத்திவருகிறார் என்றால் எனது மாமியார். நான் Housing loan பெற்றுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து உள்ள வீட்டிற்கு maintenance தொகை எவ்வளவு கொடுக்கிறேன் என்றால் நான் தான் அங்கு வசித்து வருகிறேன். கார்பரேசனில் இருந்து எனக்கு நோட்டிஸ் எதுவும் வந்ததா என்றால் வீட்டுவரி சுமார் ரூபாய் 630 செலுத்தவேண்டும் என்று நகராட்சியில் இருந்து அறிவிப்பு வந்தது. 2ம் பிரதிவாதி பெற்ற கடனுக்கு நான் எவ்வளவு தொகைக்கு சூரிட்டியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ரூபாய் 5 லட்சம்.

3. 2ம் பிரதிவாதிபெற்ற கடனை எனது மாமியார் கட்டிமுடித்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடுதான் நான் வசிக்கும் வழக்கு சொத்தாக சொல்கிறேன் என்றால் சரிதான். **(அந்த புகைப்படங்கள் 4 எண்ணம் பி.சா.ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.)** முதல் புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ள வீட்டில் முதல் தளம் உள்ளதா அல்லது மொட்டமாடி உள்ளதா என்றால் மொட்டமாடி உள்ளது. 2வது புகைப்படத்தில் உள்ள பச்சை நிறகதவு தான் வாசல் கதவு என்றால் சரிதான். 3ம் வது புகைப்படம் வீட்டின் எந்த பகுதியில் உள்ளது என்றால் பின்புறத்தில் உள்ளது. அதில் காட்டப்பட்டுள்ள சாமான்கள் என்னுடையது தான். 4வது படத்தில் உள்ள பகுதி வீட்டின் எந்த பக்கத்தில் உள்ளது என்றால் மேற்குபக்கம் உள்ளது. அதில் காட்டப்பட்டுள்ள கருப்பு நிற டேங் எங்களுடைய டேங் தான்.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)